# பொதுவுடைமை இலக்கியக் கூராய்வுச் சிந்தனைகள்

*அ.ஏஞ்சல் ரோஸ்லின்,*
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,*
*தமிழியல் உயராய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி, உதகை.*

**கலைச்சொற்கள்**

*பொதுவுடைமை, முற்போக்கு, பிற்போக்கு, இலக்கியம், நவீனத்துவம், யதார்த்த வாதம், கலை, வாழ்க்கை.*

**முன்னுரை**

*மார்க்சிய இயக்கத்தின் அடிப்படையான செயற்தன்மை பொதுவுடைமைச் சிந்தனையில் அமைந்தது. தொழிலாளி x முதலாளி, கீழ்ச்சாதி x மேல்சாதி, கலை வாழ்க்கைக்காக x கலை கலைக்காக என்னும் முரண்கள் அனைத்தும் வர்க்கப்போராட்டத்தின் விளைவுகள்தாம் என்று கண்டனர். இலக்கியத்தில் மார்க்சியத்தின் உரிமைகளை, வெளிப்பாடுகளை வென்றெடுப்பது, அதற்காக எதார்த்தங்களைப் பிரதிபலிப்பது, இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்ற முறைகளை அமைத்துக்கொண்டன. இச்செயற்பாட்டில் 'மார்க்சிய அழகியல்' என்ற பதமும் உருவாக்கப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால், சுரண்டுவோர் x உழைப்பாளர் என்ற ஒன்றுக்கொன்று முரணான இரண்டு அணியில் பிரிந்து நிற்கிறது இச்சமுதாயம். ஒடுக்கப்பட்ட சாதாரண மக்களின் விடுதலை உணர்வுகளிலே பொதுவுடைமைச் சமுதாயம் மலரும்; வர்க்க முரண்பாட்டில் உழைப்போருக்கான உரிமைகளைப் பெறுவது பொதுவுடைமை எனக் கூறலாம்.*

**பொதுவுடைமை: விளக்கம்**

*கலைக்களஞ்சியம், **"உற்பத்திச் சாதனங்கள் சமூகத்தின் பொதுவுடைமை ஆக்கவோ அல்லது வருமானத்தை சமூக மக்களிடையே நியாயமான முறையில் பாகுபாடு செய்யவோ முற்படும் சமூக அமைப்பு ஆகும்"** [1] என்கிறது.*

*க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, **"உற்பத்திச் சாதனங்கள் மக்களின் உடைமையாக அரசின் கட்டுப்பட்டில் இருக்கவேண்டும். திறமைக்கு ஏற்ற உழைப்பு தேவைக்கு ஏற்ற பங்கீடு கிடைக்கச் செய்ய வேண்டும். வர்க்க பேதம் இல்லாத சமுதாயம் அமைய வேண்டும் என்பனவற்றை வலியுறுத்தும் அரசியல் கோட்பாடு"** [2] என்கிறது.*

*ராகுல்சாங்கிருத்தியாயன், **"பொதுவுடைமைக் கொள்கையின் நோக்கம் எல்லா நாடுகளையும் அதாவது உலகத்தியே ஒரு குடும்பமாக ஆக்கி, மொத்தச் சொத்துக்களையும் அந்தக் குடும்பச் சொத்தாக ஆக்கிவிடுவது. தேவையின் கணக்கெடுத்து அவற்றைத் தயாரிப்பதற்காகச் சமுதாயத்தின் எல்லா மனிதர்களுக்கும் வேலைகளைப் பகிர்ந்துக் கொடுத்துவிடுவது. உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்களைத் தேவைக்கேற்ப விநியோகிப்பது. எல்லா மனிதர்களுக்கும் உணவு, உடை, நல்லவீடு, நோய்க்கு மருந்து, குழந்தைக்குக் கல்வி இவற்றிற்கு ஏற்பாடு செய்வது. இவ்வளவுதான். மற்றவர்களின் உழைப்பைத் திருடுவதன் பெயர் இலாபம். அதற்குப் பொதுவுடைமைக்கொள்கையில் இடமே இல்லை"** [3] என்று தனது 'வால்கா முதல் கங்கை வரை' என்னும் நூலில் கூறுகிறார்.*

*மார்க்சிய இயக்கத்தின் சாரம் பொதுவுடைமை - பொதுவுடைமை இயக்கம் ஆகும். மார்க்சிய இயக்கத்தின் பிரிவுகள் இவற்றில், சில பிரச்சினைகளில் சிலவற்றிற்கு பாரதூரமான இடம் தரலாம். இலக்கியத்தில் இதன் விளைவு மற்றும் செயல்பாடு 'சோசலிச எதார்த்தம்' என்றழைக்கப்படுகிறது.*

**மார்க்சிய இலக்கியம்**

*மார்க்சிய இலக்கியம் என்னும் சொற்றொடர் ஒரு நோக்கில் மார்க்சிய மூலவர்கள் மற்றும் அதன் தத்துவவியலாளர்களால் அச்சித்தாந்தம் குறித்து எழுதப்பட்ட நூல்கள் எனவும் பிறிதொறு நோக்கில் அசித்தாந்தத்தை ஏற்றுக்கொண்ட படைப்பாளிகளால் அக்கொள்கை சார்ந்து படைக்கப்பட்ட இலக்கியம் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது.*

***"மார்க்சியம், இலக்கியத்தில் செயல்படுகிறபோது, அரசியலை, கட்சியை ஆணையில் வைத்து அல்ல; இலக்கியப் படைப்பாற்றலின் நியதிகளையும் ஆணையில் வைக்கிறது."***[4] *(தமிழ் இனி 2000, ப.493) என்பார் பா.செயப்பிரகாசம். மனித உணர்ச்சியின் தூண்டுதல்களை உள்வாங்கிக்கொண்டு, எல்லாவற்றையும் விஞ்ஞானப்பூர்வமாக அணுகுவதும் மார்க்சியம் யதார்த்தத்தோடு அது தன்னை உரசிக்கொள்கிறது.*

*சமூகப்பிரச்சினை, அந்தப் பிரச்சினைகளில் இயங்கும் மனிதர்கள், மனித உறவுகள், அவலப்பாடுகள், களிப்புக் காட்சிகள் என சமூக வாழ்வுப் பிரச்சினைகளில் மையம் கொண்டது மார்க்சிய இலக்கியம். சமுதாயப் பொருளாதாரக் கட்டுகளிலிருந்து மானிடம் விடுதலை பெற்று சமத்துவமாக, சகோதர உறவுகளோடு வாழ செயல்முறையில் வழிகாட்டுவது மார்க்சிய இலக்கியமாக அணுகப்படுகிறது.*

*உள்ளதை உள்ளவாறே வெளிப்படுத்துவது, குறைகளைச் சுட்டுவது, துன்பங்களைக் கண்டு புலம்பாமல் அவற்றை மாற்றும் வழிகளைக் கூறுவது, ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி வீறுநடை போடச்செய்வது ஆகியவற்றை இலக்கியத்துறையில் கொண்டுவந்து சேர்க்கிறது மார்க்சியம்.*

*மார்க்சிய இலக்கியத்தை கவிதைகளில் இனம் காணலாம் என்றால் அவர்களைப் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.* ***ப.ஜீவானந்தம், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், சி.ரகுநாதன், கே.சி.எஸ்.அருணாச்சலம், பரிணாமன், தணிகை செல்வன், தமிழன்பன், புவியரசு, ப.வேலுச்சாமி, ஏ.தெ.சுப்பையன், சக்திக்கனல், இன்குலாப், ஜீவபாரதி, பொன்னீலன், பொன்மணி, தேனரசன், செவ்வண்ணன், தமிழ் ஒளி, மணியரசன்*** *போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.* ***இயக்கச் சார்பில்லாமல் இச் சிந்தனைகளை எழுதியவர்களும் உண்டு.***

*மார்க்சிய இயக்கம்,* ***வானம்பாடி****களின் தோற்றத்திற்கு வித்திட்டது. தீவிர செயற்களப் படைப்பாளிகளாக விளங்கிய வானம்பாடிகள்* ***'சமூக மாற்றம்'*** *என்பதில் அக்கறை கொண்டவர்கள். இவர்களிடம் திராவிட இயக்கத்தின் தொடர்ச்சித் தன்மை வேறுவகையில், வேறு பிரச்சினைகளுக்கு அழுத்தம் கொடுப்பதாக இருந்தது. அவ்வகையில் இவர்களுக்கு ஆதர்ஷமாக விளங்கியவர்கள் மார்க்ஸ்-ஏங்கெல்ஸ்- லெனின்-மாவோ. இந்தியாவில் இத்தகைய ஆளுமைகளாக புத்தர்-அம்பேத்கர்-பெரியார். மற்றும் தேசியத்தில் மக்களாட்சி, சிந்தனையில் தமிழ் என்றும் இதனோடு இணைத்துச் சொல்லலாம். இவையனைத்தும் ஒன்று சேர்ந்து, மனிதனின் அன்றாடப் பிரச்சினையிலிருந்து தள்ளியிருந்த* ***'கலை கலைக்காகவே'*** *என்பதிலிருந்து விலகி* ***'கலை-மக்களுக்காகவே'*** *என்ற இடத்தை அடைந்து விஞ்ஞான கண்ணோட்டத்துடன் எதிர்காலக் கனவுகளையும் கொண்டு வந்தார்கள்.*

***முற்போக்கு இலக்கியம் ஒரு பார்வை***

*முற்போக்கு என்பதும் இடது சாரி எழுத்து என்பதும் அல்லது இச்சொற்களை மட்டும் சாராமல் மானுடப்பண்பாட்டில் முன்னகர்வை நிகழ்த்தும் எந்த ஒரு எழுத்து, இலக்கியமும் முற்போக்குச் செயல்பாடாகவே அறியப்படுகிறது. இந்த முற்போக்கு இலக்கியத்தை* **பொருளியல்வாதம்** *அடிப்படையிலும்,* ***மனிதமையநோக்கு*** *அடிப்படையிலும்,* ***மார்க்ஸிய வரலாற்றுவாதம்*** *அடிப்படையிலும் வைத்துப் புரிந்து கொள்ளலாம். இந்த மூன்றுகூறுகளும் கொண்ட படைப்பாளி இடதுசாரித் தன்மை கொண்டவராக , கட்சி சார்ந்து இருக்கலாம், சாராமலும் இருக்கலாம்.*

*பொருளியல் அடிப்படையில் பண்பாட்டு சமூகவியல் மாற்றங்களைப் பார்க்கும் மார்க்ஸியப் பார்வை பொருளியல்வாதம் என வரையறுக்கப்படுகிறது. மனிதமையநோக்கு என்பது, மனிதனை பிரபஞ்சத்தை புரிந்துகொள்வதற்கான அடிப்படை அலகாகக் கொள்ளுதல். மனிதனின் வெற்றிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் தன் சிந்தனையை முதன்மையாகச் செயல்படுத்துதல் எனலாம். மார்க்ஸிய வரலாற்றுவாதம் என்பது, புதுமை நோக்கிய நாட்டம். உலகம் மேலும் முன்னேறிக்கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கை. பழமையிலிருந்து புதுமைக்குச் செல்வதை வளர்ச்சியென்றும் மானுடத்தின் வெற்றியென்றும் கருதும் பார்வை. எதிர்காலம் மீதான நம்பிக்கை. வரலாறு மானுடனையும் சமூகத்தையும் முன்னெடுத்தே செல்கிறது என்னும் தர்க்கபூர்வ நிலைப்பாடு என்றவாறு புரிந்து கொள்ளலாம்.*

*ஜெயகாந்தன், மனிதனை மையமாக்கியே அவருடைய சிந்தனைகள் எழுந்தன. மானுடம் முன்னேறுகிறது என்பதில் நாட்டம் கொண்டவர். புதுமைப்பித்தன், வரலாற்றின் பெரும் ஒழுக்கில் மனிதனை ஒரு சிறுகூறாகவே அவர் பார்த்தவர். தொ.மு.சிதம்பர ரகுநாதனை தமிழ் இடதுசாரி எழுத்தின் முதன்மையான ஆளுமை என்று அறியப்பட்டவர். அவருடைய எழுத்துகள், சோஷலிச யதார்த்தவாதம் என்னும் அழகியல் முறையை வழிகாட்டு நெறியாகக்கொண்டவை. தொ.மு.சிதம்பர ரகுநாதனுக்குப்பிறகு கெ.முத்தையா, டி.செல்வராஜ் , கு.சின்னப்பபாரதி பொன்னீலன் என்னும்*

நால்வரைச் சொல்லலாம். மானுடவாழ்க்கையின் சித்திரத்தை அளிக்கும் இலக்கிய முக்கியத்துவம் கொண்டவை. இடதுசாரி எழுத்தாளர்கள் **சோஷலிச யதார்த்தவாதம்** என்னும் அழகியல் வடிவை ஏற்றுக்கொண்டவர்கள். ஸ்டாலினால் முன்வைக்கபட்ட அந்த அழகியல் கொள்கை . சோஷலிசம் என்பது அரசியல் கொள்கை. யதார்த்தவாதம் என்பது அழகியல்முறை. அழகியல் ரீதியாக யதார்த்தவாதம் என்பது 'உள்ளது உள்ளபடி கூறுவது' என்பதுதான்.

சோஷலிச யதார்த்தவாதம் என்பது ஒருவகை யதார்த்த எழுத்து. தன் அரசியல் நம்பிக்கையாக சோஷலிசத்தை முன்வைப்பது. சமூக ஆய்வுக்கருவியாக மார்க்சியத்தின் பொருளியல்வாதத்தையும் வரலாற்றுவாதத்தையும் கையாள்வது. மானுடமையநோக்கை இலட்சியவாதமாகக் கொண்டது. இதன் முன்னோடிச் சிந்தனையாளர்கள், வி.ஜீவானந்தம், ஆர்.கே.கண்ணன், எஸ்ராமகிருஷ்ணன், நா.வானமாமலை ஆகியோராவர். எழுத்தாளன் சமூகத்தை எப்படி பார்க்கவேண்டும். அவன் படைப்பின் இயல்பு எப்படி இருக்கவேண்டும் என்பதை கட்டுரைகளினூடாகவும் இவர்கள் நிலை நிறுத்தினார்கள்.

இதற்கு அடுத்த தலைமுறையில் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி சி.கனகசபாபதி, தி.க.சிவசங்கரன் ஆகிய நால்வரையும் இங்கு இடதுசாரி அழகியலை வலியுறுத்திய விமர்சகர்கள் என்று சொல்லலாம். இச்சூழலில்தான் தமிழில் நவமார்க்ஸியக் குரல்கள் எழுந்து வந்தன. அவை மார்க்ஸியத்தின் எளிமையான பொருளியல்வாதத்தை மறுபரிசீலனை செய்தன. பண்பாட்டுக்கு அதற்குரிய தனித்த இயங்குமுறைகள் உண்டு என்று வாதிட்டன. மார்க்ஸிய வரலாற்றுவாதத்தை மிகவிரிவான தளத்தில் முன்வைத்து பண்பாட்டை ஆராய முற்பட்டன. அதற்கு ஐரோப்பிய நவமார்க்ஸிய கொள்கைகளை கையாண்டன. எஸ்.என்,நாகராசன் அக்குரலை முன்வைத்த முன்னோடி மார்க்ஸியக் கோட்பாட்டாளர். அதை இலக்கியத் தளத்தில் விரித்தவர் ஞானி. அவர்கள் நடத்திய புதிய தலைமுறை, நிகழ் போன்ற இதழ்கள் இடதுசாரிகளின் நேரடியரசியல் சார்ந்த இலக்கிய அணுகுமுறையை மாற்றியமைத்தன.

விஜயபாஸ்கரன் இடதுசாரி எழுத்து தமிழில் வேரூன்ற அடித்தளம் அமைத்த முன்னோடியாகக் கருதப்படுகிறார். அவருடைய சரஸ்வதி இதழில்தான் சுந்தர ராமசாமி ஜெயகாந்தன் போன்றவர்கள் அறிமுகமானார்கள். முற்போக்கு இலக்கியத்தின் முதல் இதழ் என்றே அதைச் சொல்லமுடியும்.வி.ஜீவானந்தம் தொடங்கிய தாமரை பின்னர் தி.க.சிவசங்கரன் ஆசிரியத்துவத்தில் இடதுசாரி எழுத்துக்களை உருவாக்கியது. எஸ்.ஏ,பெருமாள், அருணன் ஆகியோர் இடதுசாரி இதழியலில் முக்கியமான பங்களிப்பாற்றியவர்கள்.

இதற்கு அடுத்த தலைமுறையின் முதன்மையான இடதுசாரி எழுத்தாளர்கள் பூமணி, ராஜேந்திரசோழன், கந்தர்வன். அம்பை. பூமணி, பொருளியல் நோக்கு மானுட மைய நோக்கு வரலாற்றுவாதம் ஆகிய மூன்றும் ஒருபோதும் பிறழாமல் அவர் படைப்புகளில் உள்ளன. ஒருவகையில் ஜெயகாந்தனுக்குப்பிறகு தமிழில் மிகச்சிறந்த இடதுசாரி எழுத்தாளர் என்று அறியப்படுபவர் பூமணி.

மனித உள்ளமென்பது பொருளியல் அடிப்படையிலான உற்பத்தி – நுகர்வு ஆகியவற்றால் ஆன நீண்ட வரலாற்றால் கட்டமைக்கப்பட்டது என்பது மார்க்சிய நோக்கு. பண்பாட்டால் அடக்கப்பட்ட அடிப்படை உணர்வுகளின் வெளிப்படையாக மானுட உள்ளத்தைப்பார்க்கும் ஃப்ராய்டியம் மார்க்சியத்துக்கு எதிரான ஒரு கொள்கை. ஆகவே செவ்வியல் மார்க்சியர்களால் அது எப்போதும் எதிர்க்கப்பட்டே வந்துள்ளது.மார்க்சியத்துக்கும் ஃப்ராய்டியத்துக்குமான ஒருவகை ரகசிய உறவு நிகழ்ந்தவை என்று ராஜேந்திரசோழனின் படைப்புகளைக்கூறலாம்.

எழுத்தாளர் விந்தனும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்.முறையான மார்க்சிய அறிவு ஏதும் அவருக்கில்லை. கருத்தியல் ரீதியாக அவர் ஈ.வெ.ராவை சார்ந்தவர்தான். ஈ.வெ..ரா முன்வைத்த ஒருவகையான ஒழுக்கவியலும் மூர்க்கமான எதிர்ப்புணர்வும் அவரிடம் இருந்தது. ஆயினும் பொருளியல்வாதம், மனிதமைய நோக்கு ஆகியவை அவரை இடதுசாரிகளுக்கு அருகே நிறுத்துகின்றன. இப்போக்கில் சு.சமுத்திரம், தனுஷ்கோடி ராமசாமி பிரபல ஊடகங்களிலும் எழுதியவர்கள் ஆவர்.

அடித்தள மக்களின் வறுமை, அவ்வறுமையிலும் வெளிப்படும் அவர்களின் பண்பாட்டுச் செழுமை ,அரசியல் படுத்தப்பட்ட அவர்கள் அடையும் சமூகப்பார்வை ஆகியவற்றை மேலாண்மை பொன்னுசாமி எழுதினார். தேனி சீருடையான், சோலை சுந்தரப்பெருமாள், இரா.தே.முத்து, போன்றவர்களை அவ்வரிசையைச் சேர்ந்தவர்கள் எனலாம். ச. தமிழ்ச்செல்வன் அடுத்த கட்ட இடதுசாரி எழுத்தாளர்கள் நடுவே ஆழமான ஒரு செல்வாக்கை உருவாக்கினார்.

இடதுசாரி இலக்கியத்தில் திருவண்ணாமலை ஒரு முக்கியமான மையமாக இருந்தது. நாட்டாரியல் கதைகளின் விந்தைகளை புனைவுகளில் இணைத்துக்கொண்ட பவா செல்லத்துரையின் படைப்புக்கள் சோஷலிச யதார்த்தவாததை மீறிச்சென்றன. ஆனால் அனைத்துவகையிலும் முற்போக்குப் படைப்புக்களாகவும் அமைந்தன.

*உதயஷங்கர், எச்.ஜி.ரசூல், மீரான் மைதீன் அடிப்படையில் மார்க்ஸிய நோக்கை ஏற்றுக்கொண்டு சற்று சுதந்திரமான அழகியல்கொள்கைகளுடன் எழுதியவர்கள். மார்க்ஸிய தத்துவச் சட்டகமான வரலாற்றுவாதத்தை விரிவான தளத்தில் விவரித்த சு.வெங்கடேசன் இன்றைய இடதுசாரி எழுத்தாளர்களில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர்.*

*புதுக்கவிதையில் இடதுசாரிகளின் இருப்பு குறிப்பிடத்தகுந்தது. வானம்பாடி இயக்கத்தினர் நேரடியாக முற்போக்குக்கருத்துக்களை வெளிப்படுத்தினர். வானம்பாடிக்கவிஞர்கள் முற்போக்கு கருத்துக்களையும் திராவிட இயக்க மொழியையும் இணைத்தவர்கள். அப்துல் ரகுமான் மீரா, நா. காமராசன் கங்கைகொண்டான். தொண்ணூறுகளில், புதுக்கவிதைக்காரர்கள் லட்சியவாத்தை உணர்ச்சிகரமாக கூவி முன் நிறுத்தவில்லை. அறைகூவும் தோரணை அவர்களிடமில்லை. அவர்களை பெரிதும் பாதித்த கவிஞர்கள் ஆத்மா நாம். மொழியாக்கம் வழியாக வந்த ழாக் பிரெவர் போன்ற ஐரோப்பியக் கவிஞர்கள். தமிழில், யவனிகா ஸ்ரீராம், லிபி ஆரண்யா முதன்மையானவர்களாகச் சுட்டிக்காட்டலாம்.*

***முற்போக்கு பிற்போக்கு-இலக்கியம்***

*மனிதனின் அகப்புற வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் அவனுடைய வாழ்க்கைப் பயணத்திற்கான நல்வழிப்பாதையை அமைப்பதுமான செயல்களை முற்போக்கானதாகவும் மாறாக இதற்குத் தடைகளை உண்டாக்குவதென்பது பிற்போக்கானதாகவும் கருத்தியல் உலகில் முன்வைப்பர்.*

*பொதுவுடைமை இயக்கத்தினர்தான் தத்துவ ரீதியாகவும், கலை இலக்கிய ரீதியாகவும் முற்போக்கு பிற்போக்கு என்ற கருத்தாக்கங்களை அறிமுகப்படுத்தினார்கள் என்பது உண்மை. அதை விஞ்ஞான ரீதியாகவேதான் அவர்கள் கையாண்டார்கள். ஏனென்றால் சமூகத்தில் முன்னேறும் சக்திகள், அதைத் தடை செய்யும் சக்திகள் என்ற பாகுபாடு இருக்கும் பொழுது முன்னேறுவதை முற்போக்கு என்றும், அதைத் தடுப்பதைப் பிற்போக்கு என்றும் அழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே முன்னேறும் சக்தி முற்போக்கு என அழைக்கப்படுவது கவனத்திற்குரியது.மேலும் முற்போக்கினை விரிவாக விளக்கும் முகமாக,'மாறுதல்கள்' என்ற சொல்லினைக் கொண்டு விளக்கும் போது,*

*முற்போக்கு அல்லது பிற்போக்கு என்பதைத் தீமானிப்பது எது? ஒவ்வொரு காலகட்டத்தின் உற்பத்தி சக்தி இதைத் தீர்மானிக்கிறது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியானது சமூகத்தினை ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த மேலான கட்டத்திற்கு எடுத்துச் செல்கிறது. பழைய கற்கருவிகளின் முன்னேறிய கட்டமாக புதிய கற்கருவிகள் தோன்றின. இதன் முன்னேறிய நிலையாக உலோகக் கருவிகள் உருவாக்கப்பட்டன; இதன் முன்னேறிய கட்டமாகப் பல இயந்திரங்கள் அமைக்கப்பட்டன. இவை முன்னேறும் பொழுது உற்பத்தி அதிகமாகிறது. உற்பத்தி அதிகமாகும் பொழுது சமூகத்தின் அமைப்பும் மாறுகிறது. சமூக அமைப்பு மாறும் பொழுது அதற்கு ஏற்றப் புதிய சிந்தனைகள் உருவாகின்றன, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியினையொட்டி இந்தத் தொடர் மாறுதல்கள் நிகழ்கின்றன.*

*இந்த மாறுதல்கள் முற்போக்கான மாறுதல்கள். இவற்றினை ஊக்குவிக்கும் சக்திகளை முற்போக்கு சக்திகள் என்கிறோம். இந்த மாறுதல்களினால் ஏற்படும் பலன்கள் எல்லோருக்கும் சமமாகக் கிடைத்துவிட்டால், சமூகத்தில் பிரச்சினைகள் இருக்காது. ஆனால் நடைமுறையில் சமூக அமைப்பு அவ்வாறு இல்லை. வலியவன் வாய்ப்பினைப் பயன்படுத்தி முன்னேற்றத்தின் பலன் தனக்குக் கிடைக்குமாறு ஏற்பாடு செய்து கொள்கிறான். அடிமைப்பட்டவன் முன்னேற்றத்தின் பலன் மறுக்கப்பட்டு வறுமையிலும், துன்பத்திலும் உழலுகிறான், அடிமைப்பட்டவன் இதில் இருந்து முன்னேறத் துடிப்பது, விடுதலைப் பெறத் துடிப்பது முற்போக்கான செயலாகும். இவனை முன்னேற விடாமல் தடுக்கும் சக்திகளைப் பிற்போக்கு சக்திகள் என்கிறோம்.*

***முடிவுரை***

*இதனடிப்படையில், **காலங்காலமாக சுரண்டலுக்கு ஆட்பட்ட மக்களின் எண்ணங்களை இலக்கியத்தில் பதிவு செய்யும் போக்கினை முற்போக்கு இலக்கியங்கள்** என்றும் அழைக்கப்படுகிறது. முற்போக்கு என்ற ஆக்கம் உருவாவதற்குக் காரணம் உலக இலக்கியத்தில், நீண்ட நெடுங்காலமாக ஆதிக்கச் சக்திகளின் சிந்தனைகள் வலுவாக இடம் பெற்றிருந்ததுதான். இதன் விளைவாக சமூகத்தில் விடுதலைப் பெறத் துடித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு ஆதரவான சார்பு இலக்கியங்கள் முற்போக்கு இலக்கியங்கள் என்று அழைக்கப்படுகின்றன என்று அறிகிறோம்.*

***சான்றெண் விளக்கக் குறிப்புகள்***

*[1] கலைக்களஞ்சியம் (பகுதி 3), ப. 187.*
*[2] கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.563.*
*[3] ராகுல் சாங்கிருத்தியாயன், வால்கா முதல் கங்கை வரை, பக்.45-46.*
*[4] தமிழ் இனி 2000, காலச்சுவடு பதிப்பு, ப. 238.*